2018

No. of Printed Pages : 4

2018

101659 **8111**

*Register Number*

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் **100** **வார்த்தைகளுக்கு** **மிகாமல்** விடையளிக்கவும்.

**10x2=20**

**1.** உலகெல்லாம் - பிரித்து எழுதி புணர்ச்சி விதி கூறுக.

**2.** பாசிலை, பைந்தார் பிரித்து எழுதி புணர்ச்சி விதி கூறுக.

**3.** ''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''. - இக்குறட்பாவை உரைநடைப்படுத்தி எழுதுக.

**4.** ''வாவி யுறையும் மடவனமே எந்தன்'' - என்ற வரி இடம் பெற்ற நூல் எது ?
வாவி - பொருள் எழுதுக.

**5.** காலப் பெயரை உதாரணத்துடன் விளக்குக.

**6.** 'தலைக்கு ஒரு பழங்கொடு - இது எவ்வகை ஆகுபெயர் ? விளக்கம் தருக.

**7.** மூன்றாம் வேற்றுமை உறுபுகள் யாவை ? அவை எவ்வெவ் பொருள்களில் வரும் ?

[ Turn over

8. மஞ்சளது பொடி, முருகா வா.

-இத்தொடர்களில் இடம் பெற்றுள்ள வேற்றுமைகளை சுட்டி எழுதுக.

9. 'பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து'

-இத்தொடரில் உருபு மயங்கியுள்ளமையை விளக்குக.

10. இரட்டைக்கிளவி என்றால் என்ன ? அது எவ்வெவ் பொருள்களில் வரும் ?

II. **எவையேனும் 5 வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. நீரின்றி, மண்ணரிப்பு - பிரித்து எழுதி புணர்ச்சி விதி கூறுக.

12. நாராய் நாராய் செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!

(i) பாடலின் பொருளைக் கூறுக.

(ii) பாடலில் இடம் பெற்றுள்ள நயத்தினை எழுதுக.

13. ''நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா.''

-இப்பாடலில் உள்ள தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

14. பெயர்ச்சொல் என்றால் என்ன ? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

15. எல்லாம், தாம், தான் இன்னன பொதுப்பெயர் விளக்குக.

16. ஏழாம் வேற்றுமை உருபு எது ? அது எவ்வெவ் பொருள்களில் வரும் என்பதை விளக்குக.

17. வல்லெழுத்து மிகும் இடம் நான்கினை எழுதுக.

18. பெண்கல்வி என்ற தலைப்பில் எழுத குறிப்புச் சட்டகம் எழுதுக.

## பகுதி - ஆ

III. **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் **100 வார்த்தைகளுக்கு** மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

**19.** மொழியும் பல்வேறு பாடும் குறித்து எழுதுக.

**20.** மொழிப்பாடம் ஒரு திறன் பாடம். ஏன் ?

**21.** பேசுதல் திறனை வளர்க்கும் வழிவகைகள் நான்கினை கூறுக.

**22.** மாணவ ஆசிரியராகிய நீவீர் வகுப்பறையில் பயன்படுத்திய நாபிறழ் பயிற்சித் தொடர்கள் நான்கினை எழுதுக.

**23.** செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள் நான்கினை கூறுக.

**24.** தொடக்கநிலை வகுப்புகளில் செயல்படுத்தக்கூடிய மொழிப் பாடத்திற்குரிய விளையாட்டு முறை நான்கினை எழுதுக.

**25.** குறைகளைதல் - நிறை பின்பற்றல் என்றால் என்ன ?

**26.** பாடம் கற்பிப்புத் திட்டம் எழுதுவதின் நன்மைகள் யாவை ?

**27.** சிறந்த பாடம் கற்பிப்புத் திட்டத்தின் பண்புகளாக நீவீர் கருதுவன யாவை ?

**28.** கற்பித்தல் குறிப்பு, பாடம் கற்பிப்புத் திட்டம் - வேறுபடுத்துக.

[ Turn over

**IV.** எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு **200 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

**29.** மொழி, இலக்கியம், அழகுணர்ச்சி குறித்து எழுதுக.

**30.** மொழியும், சமுதாயமும் பற்றி எழுதுக.

**31.** பிறப்பு அடிப்படையில் அடைப்பொலிகள் குறித்து எழுதுக.

**32.** சொல் முறைப் படிப்பு என்றால் என்ன ? அதன் நிறை குறைகளை எழுதுக.

**33.** பண்பாட்டினை வளர்க்கும் வண்ணம் அமைந்துள்ள சங்க இலக்கியப் பாடல் வரிகள் நான்கினை எழுதுக.

**34.** தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு மொழிப் பாடத்தில் ஒப்புடைப்புகளை எவ்வாறு வழங்குவாய் ?

**35.** அபிதான சிந்தாமணி, சூடாமணி நிகண்டு குறித்து எழுதுக.

**36.** கற்பித்தல் குறிப்பு பற்றி எழுதுக.

## பகுதி - இ

**V.** ஒவ்வொரு வினாவிற்கும் **500 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

**37.** (அ) மாணவ ஆசிரியராகிய நீவீர் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு பேசுதல் திறனை மேம்படுத்த மேற்கொள்ளும் வழி முறைகளை விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) தொடக்கநிலை வகுப்பு மாணவர்களுக்கு எவ்வெவ் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு செய்யுள் பாடம் கற்பிப்பாய் என்பதனை விளக்கி எழுதுக.

**38.** (அ) தொடக்க வகுப்புகளில் பல்வகுப்பு கற்பித்தலில் ஈடுபடும் பொழுது மேற்கொள்ளும் வழி முறைகளை விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) வகுப்பறை நிகழ்வுகள் சிறப்பாக அமைய கற்றல் கற்பித்தல் பொருட்களின் பங்கு இன்றியமையாதது என்பதனை விளக்கி எழுதுக.

-oOo-